# விடுதலைப்புலிகளுடன் இந்தியப்படைபோரிட்டதில் ஐம்பது கோடி அமெரிக்க டொலர் செலவு

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 பங்குனி: 18 றம்ழான் பிறை: 3 இதழ்: 47
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 31-03-1990

## மேற்கு ஜெர்மன் பத்திரிகை தகவல்

(ஹம்பேர்க்)

உலகில் நாலாவது பெரியதான இந்திய இராணுவம் இலங்கையில் படுதோல்வியடைந்துள்ளது. இத்தோல்வியால் அது 32 மாதங்களின் பின் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு மேற்குஜெர்மன் பத்திரிகையொன்று தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கையில்:

தெற்கு ஆசியாவின் பொருளாதார கேந்திர முக்கியநாட்டிற்கு இலங்கையில் சுமார் 50 கோடி அமெரிக்க டொலர் செலவுஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

## பதவி கிடைக்காதபோது கட்சியில் இருப்பேன்

(கொழும்பு) — காமினி

அமைச்சர் பதவி எனக்கு வழங்கப்படாத போதிலும் தொடர்ந்தும் ஐ. தே. க. கட்சியில் அங்கம் வகிப்பேன் கட்சியிலிருந்து விலகும்நோக்கம் எதுவும் இல்லை என முன்னாள் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா தெரிவித்துள்ளார், என்ன நிகழ்ந்தாலும் அதைப் பொருட்படுத்தப் போவதில்லை என்றும் அவர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

திரு. காமினி திஸநாயகா தற்போது அமெரிக்க பல்கலைக் கழகமொன்றில் வெளிவாரி பட்டப்படிப்பொன்றை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (சி)

# ★ தடுத்துவைக்கப்பட்ட இந்திய கடற்றொழிலாளர்களை புலிகள் நிபந்தனை எதுவுமின்றி விடுவித்தனர்!

(வடமராட்சி)

வல்வெட்டித்துறைக் கடற்கரைக்கு அண்மையில் வைத்து பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் அனைவரும் மனிதாபிமான அடிப்படையில் எந்தவித நிபந்தனையுமின்றி தமிழ் ஈழவிடுதலைப் புலிகளால் நேற்று அதிகாலை விடுதலை செய்யப்பட்டு பாதுகாப்பாக அனுப்பிவைக்கப்பட்டார்கள். (8ம் பக்கம் பார்க்க)

## இலங்கை கடற்பகுதியில் இனிமேல் அத்துமீறிப் பிரவேசிக்கமாட்டோம்!

- இந்திய மீனவர் தலைவர் தகவல்

(வடமராட்சி)

இந்திய மீனவர்களாகிய நாம் இலங்கைக் கடற்பிராந்தியத்தில் அத்துமீறித்தொழில் செய்து வருவதாகவும் இலங்கைத் தமிழ் மீனவர்களின் வலைகள், மீன் கூடு போன்றவற்றை எமது மீனவர் களவாடிவந்ததாகக் கூறப்பட்டதும் உண்மையே.

இங்கு விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுவந்த நாமும் இது போன்ற அத்துமீறல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தோம் என்பதை ஒப்புக் கொள்ளுகின்றோம். (8ம் பக்கம் பார்க்க)

## புதிய அமைச்சரவை விஜயதுங்க மீண்டும் பிரதமர்

### காமினிக்கு அமைச்சர் பதவி இல்லை

26 புதிய அமைச்சர்கள்
29 இராஜாங்க அமைச்சர்கள்

(கொழும்பு)

பிரதம மந்திரியாக திரு. டி. பி. விஜயதுங்கா மீண்டும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நேற்று அறிவிக்கப்பட்ட புதிய அமைச்சரவையில் 26 புதிய அமைச்சர்களும் 29 இராஜாங்க அமைச்சர்களும் நியமிக்கப்பட்டனர். ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாஸா முன்னிலையில் நேற்று இவர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்கள்.

புதிதாக ஐந்து அமைச்சர்களும் ஐந்து இராஜாங்க அமைச்சர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் ராஜாங்க அமைச்சர்கள் ஆறுபேர் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளார்கள்

அமைச்சர்களின் புதிய செயலாளர்களும் நேற்றுநியமிக்கப்பட்டனர்.

ஜனாதிபதிமாளிகையில்புதிய அமைச்சர்களின் பதவிப் பிரமாணம் வைபவரீதியாகஇடம் பெற்றது. [8-ம்பக்கம்பார்க்க]

## வல்வை பொலிஸார் இராணுவ முகாமுக்குள் இடம்பெயர முயற்சி?

(வடமராட்சி)

தனியார் வீடு ஒன்றில் இருந்த வல்வைப் பொலிசார் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து, இராணுவமுகாம் இருந்த இடத்தில்இருப்பதற்கு முயற்சி எடுத்துவருகின்றனர். இந்த முயற்சிக்கு வல்வை மக்கள் பெரும் எதிர்ப்புத்தெரிவித்துள்ளனர். (51)

## இன்று அன்னை பூபதி அஞ்சலிக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]


அன்னை பூபதியின் நினைவஞ்சலிக் கூட்டமொன்று இன்று மாலை 6 மணியளவில் யாழ். அத்தியடிபிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது. இதில் தமிழீழவிடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர்கள் பலரும் உரையாற்றவுள்ளனர்.

## நாளை முதல் ஹெல்மட் அவசியம்!

(நமது நிருபர்)

சகல மோட்டார் சைக்கிள் ஓட்டிகளும் அவருக்குப் பின்னால் இருந்து பிரயாணம் செய்பவரும் நாளை முதலாம் திகதியிலிருந்து தலைக்கவசம் (ஹெல்மட்) கட்டாயமாக அணியவேண்டும் என விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)



ஒட்டுசுட்டான் சிவன் கோவிலடிச் சந்தியில் நிறுவப்பட்டுள்ள வீரமரணமடைந்த விடுதலைப்புலிகள் போராளிகளின் ஞாபகார்த்த தூபியைப் படத்தில் காணலாம.

(படம்: ஒட்டுசுட்டான் நிருபர்)

## புலிகள் ஆயுதங்களை யாரிடமும் கையளிக்கமாட்டார்கள்!

- அன்ரன் பாலசிங்கம்

[வடமராட்சி]

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை எச்சந்தர்ப்பத்திலும் யாரிடமும் கையளிக்கமாட்டார்கள். இது இறுதியான முடிவு. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முன் தினம் மாலை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைக்குழு உறுப்பினர் திரு செங்கதிர் தலைமையில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் பொது மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (8ம் பக்கம் பார்க்க)

## யாழ். போதனாவைத்தியசாலையில் இன்று நடைபெறவிருந்த நேர்முகப்பரீட்சை நிறுத்தம்

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலையில் இன்று 31ம் திகதி முதல் எதிர்வரும் 6-ம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவிருந்த சுகாதாரச் சுத்திகரிப்பு ஆண், பெண் தொழி (8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

தையல் வேலையில் அனுபவம் மிக்க பெண்கள் தேவை நேரில்வரவும். திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும் என் வீரசிங்கம், 1009, துணைவீதி, சொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (சி-3666)

தேவன்ஸ் சியாக்காய் பவடர் மற்றும் தேவன்ஸ் தயாரிப்புகளை விற்பனைசெய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை 'தேவன்ஸ்' விசுவலிங்கம் 139, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (சி-3660)

ஒரு சிறிய குடும்பம் வசிப்பதற்காக வீடு ஒன்று வாடகைக்கோ அல்லது விற்பனைக்கோ தேவை வீடு யாழ் நகர மையத்திலிருந்து ஒரு மைல் சுற்றுடலிலும் கண்ணியமான இடத்திலும், சகல வசதிகளுடனும் அமைந்திருத்தல் வேண்டும் தொடர்புகொள்ளவும் விளம்பர இல C-3662, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-3662)

இளம் குடும்பம் ஒன்றிற்கு 50 வயதிற்கு மேற்பட்ட ஆண் உதவியாளர் ஒருவர் தேவை. அன்புடன் பராமரிக்கப்படுவார். தொடர்புகொள்ளவும்; விளம்பர இல. சி3669, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-3669)

தொழிற்சாலையில் கணக்கு எழுதுவதற்கு அனுபவம் வாய்ந்த சிறந்த எழுத்துள்ளவர் தேவை. சகல விபரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. சி-3672, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-3672)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# யாழ். மாவட்டத்தில் 120 தொழுநோயாளர் சிகிச்சைபெற்றுவருகின்றனர்

## பராமரிப்பு நிலையில் 160 பேர்

### - தொழுநோய் தடுப்பு அதிகாரி

[பண்டதரிப்பு]

''தொழு நோயை இனம் கண்டு ஆரம்பத்தில் தகுந்த சிகிச்சைகளை வழங்கினுல் நோயாளியை இலகுவில் குணப்படுத்தலாம். நோய் முற்றிய நிலையில் சிகிச்சை பெற்ருல் அங்கவீனமடைவது தவிர்க்க முடியதாதாகிவிடும். ஆகவே டாக்டர்களும், வைத்தியர்களும் வைத்தியசாலைக்கு சிகிச்சைபெற வரும் நோயாளர்களுக்கு தொழுநோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் காணப்படுமிடத்து அவற்றை இனம்கண்டு அதற்கான தடுப்பு மருந்துகளையும் சிகிச்சைகளையும் வழங்க வேண்டியது அவசியமானது' இவ்வாறு தொழுநோய்த் தடுப்பு பற்றிய கருத்தரங்கு அண்மையில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் நடைபெற்ற போது அதற்கு தலைமை வகித்து ஆரம்ப உரை நிகழ்த்திய யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகள் மற்றும் மத்திய மருந்தகங்கள் ஆகியவற்றின் பொறுப்பதிகாரிகள், உதவி வைத்திய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் டாக்டர் கனகசபை தொடர்ந்து உரையாற்றுகையில், தொழுநோய் பற்றிய பூரணமான அறிவையும் முயற்சிகளையும் சுகாதாரத் திணைக்களத்தில் கடமை யாற்றும் சகல வைத்திய அதிகாரிகளுக்கும், ஏனையோருக்கும் வழங்கி அவர்களின் பூரண ஒததுழைப்புடன் எமது சமுதாயத்திலிருந்து இக்கொடிய நோயை அகறறுவதற்கு இது போன்ற கருத்தரங்குகள் பேருதவியாக இருக்குமென்று தாம நம்புவதாகத குறிப்பிட்டார்.

யாழ் மாவட்ட தொழுநோய்த்தடுப்பு அதிகாரி திரு. எம். குணரத்தினம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: தொழுநோய் பற்றிய காரணிகளை இந்த கொடிய நோயிலிருந்து பாதுகாக்க எம்மாலான சகல முயற்சிகளையும் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். யாழ் மாவட்டத்தில் தறபோது 120 தொழுநோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்ருர்கள்.

ஏற்கனவே இந்த நோயினுல் பீடிக்கப்பட்ட 160 பேர் தற்போது சுகமடைந்து பராமரிப்பு நிலையில் இருக்கின்றனர்.

சடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் 31 புதிய நோயாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களுக்கு தகுந்த சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. ஒருவருக்கு தொழுநோயின் அரம்ப அறிகுறிகள் தென்படும்போது அதற்கான சிகிச்சைகளை உரிய முறையில் வழங்க வேண்டியது முக்கியமானது. நோயினுல் பீடிக்கப்பட்டவரின் சுற்றுடல், சுகாதாரம் நல்ல முறையில் பேணப்படவேண்டும். மலசல கூடவசதிகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் நோயாளி தவருது வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சைகளை முறைப்படி பெறவேண்டும்.

யாழ் மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் உள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் தொழுநோய் சிகிச்சை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மக்கள் இவற்றை அறிந்து பயன்படுத்த வேண்டும். இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சமுக மருத்துவ துறைத்தலைவர் டாக்டர் என். சிவராஜா, யாழ். மாவட்ட சுகாதாரக் கல்வி அதிகாரி கா. வைத்தீஸ்வரன், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். விஜயரத்தினம், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வி. சிறிகாந்தா, யாழ். மாவட்ட தாய்-சேய்நல வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி எஸ்.பொன்னம்பலம், ஓய்வுபெற்ற தொழுநோய்த் தடுப்பு அதிகாரி திரு. விஜயசுந்தரம் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

முற்பகலில் கருத்தரங்குமுடிவடைந்ததும் வைத்திய அதிகாரிகள் குழுவினர் தொழுநோயினுல் பாதிக்கப்பட்ட இடங்களில் ஒன்ருன சுழிபுரம் மேற்கு காட்டுப்புலம் கிராமத்திற்கு நேரடியாக வருகைதந்து அங்குள்ள நோயாளர்களைச் சந்தித்ததுடன் சுகாதார நிலைமைகளையும் பார்வையிட்டனர். (72)

### மணப்பந்தல்

கர்க்கடக லக்கினத்தில் செவ்வாய் முதலாம் இடமாக (உதயத்தில்) இருக்கும்வேளாளர் குலமதைக சேர்ந்த இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை (B. Sc. Eng) எஞ்சினியருக்கு 28 – 32 வயதுக்குட்பட்ட அதே குலத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. தொடர்பு கொள்ளவும் விளம்பர இல. சி-3641 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்1 (சி-3641)

### காணி விற்பனைக்கு

சங்கரத்தையில் 14 பரப்புக் குடியிருக்கக் கூடிய காணி டாக்டர் செல்லத்துரை வீதியில் பிரதான ரோட்டிறகு நூறுயார் தூரத்திறகுள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு;- கா. வடிவேலு, சுகாதாரப் பரிசோதகர், சுதுமலை வடக்கு, மானிப்பாய். (சி-3668)

## 50வது நாள் நினைவுதின அன்னதானம்

(31-03-1990 சனிக்கிழமை)



### திருமதி தங்கம்மா சுப்பையா

மண்ணுலகு: 22-04-1905 விண்ணுலகு: 10-02-1990

ஆனைக்கோட்டை பொன்னையா லேனைச் சேர்ந்த திருமதி தங்கம்மா சுப்பையா அவர்கள் 10-2 90ல் சிவபதமடைந்ததை முன்னிட்டு அன்ஞரின் ஐம்பதாவது நினைவு நாளாகிய 31-3-90 சனிக்கிழமை (இன்று) அவரின் ஞாபகார்த்தமாக டென்மார்க்கில் வசிக்கும் அவரின் பேரனுகிய திரு. உருத்திரதீசன் (நேதாஜி) என்பவர் கொக்குவில் மேற்கிலே எழுந்தருளி அருள்பாலிக்கின்ற அருள்மிகு ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலயத்திலே அன்னதானம் வழங்க விருப்பம் பூண்டுள்ளார். எனவே அன்பர்கள், அடியார்கள் யாவரும் அவ்வமையம் வருகைதந்து அன்னதானத்தைச் சிறப்பிக்கும்படியும், அன்ஞரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்படியும் அன்புடன் வேண்டுகின்ருேம்.

உருத்திரதிசன் (நேதாஜி) சார்பில்

ஆனைக்கோட்டை. (சி-3671)

## வீடு தேவை

சகல வசதிகளும் அடங்கிய நல்ல சூழலில் அமைந்த வீடு யாழ். நகருக்குள் உடன் தேவை.

தொடர்பு:-

தலைவர்,

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**

(யாழ். பிரிவு)

73, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

(எ-651)

## தாதிமார் தேவை

கிளிநொச்சியிலுள்ள நன்கு ஸ்தாபிக்கப் பெற்ற தனியார் வைத்தியசாலைக்கு அனுபவமுள்ள தாதிகள் தேவை. தகுதிக்கேற்ப சிறந்த சம்பளமும், உணவும் இருப்பிட வசதியும் தரப்படும். **விண்ணப்பிக்கவும்:**

வைத்திய அதிகாரி

**சாந்தி வைத்தியசாலை**

கிளிநொச்சி.

[சி-3663]

# கொழும்பில் "ஈழநாடு"

பிரதம விற்பனையாளர்

**எஸ். கே. ரேட் சென்ரர்,**

**[S. K. TRADE CENTRE]**

210, பழைய சோனகத் தெரு,

கொழும்பு - 12.

தொலைபேசி:- 23580

வெளிவாரிப் பட்டப்படிப்புகள் தொடர்பான

**பட்டப் படிப்புகள் கல்லூரியின்**

## இறுதி அறிவித்தல்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின்

வெளிநிலைப் பட்டப் பாடநெறிகளான

★ கலைமாணி B. A.

★ விஞ்ஞானமாணி B. Sc.

(புள்ளி விபரவியல்)

மேற்படி பட்டப்படிப்புக்கு இதுவரை விண்ணப்பிக்கத்தவறிய மாணவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பம் அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் உடன் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

**விரிவுரைகள் 1-4-90ல் ஆரம்பமாகின்றன.**

உதவிப் பதிவாளர்

**பட்டப் படிப்புகள் கல்லூரி,**

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[சி-3670]

## நேபாளத்தில் மாணவர் ஆர்ப்பாட்டத்தின் எதிரொலி:

# பொலிஸ் தாக்குதலில் 70பேர் காயம்!

# 7 மாணவரின் நிலை கவலைக்கிடம்!

(காட்மண்டு)

**நேபாளத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள்மீது பொலிஸார் நடத்திய தாக்குதலில் 70 மாணவர்கள் காயமடைந்துள்ளதுடன் ஏழு மாணவர்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.**

மனித உரிமைகள் மீறப்படுவதையும், பொலிஸாரின் அத்துமீறல்களையும் எதிர்த்து, ஆட்சேபனை தெரிவித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

பல்கலைக்கழகம், பாடசாலைகள். கல்வி வளாகங்களிலுள்ள ஆயிரக்கணக்கான மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை முறியடிப்பதற்காக பொலிஸார் தடியடிப்பிரயோகம் நடத்தியதுடன் கண்ணீர் குண்டுகளையும் ஊர்வலத்தினர் மீதுவீசினார்கள். இதனால் மாணவர்கள் பலர் காயமடைந்துள்ளதுடன் பல மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பலகட்சி ஆட்சி முறைக்கு ஆதரவு தெரிவித்து பலசுலோகங்களை கோஷித்தவாறு மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தைநடத்தினார்கள்.

காயமடைந்த மாணவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர். கைதானவர்களை பொலிஸார் தம்முடன் அழைத்துச் சென்றதாக கூறப்படுகிறது, (து)

## போதைவஸ்து ஒழிப்பதில் அமெரிக்கா-இந்தியா உடன்பாடு

(புதுடில்லி)

அமெரிக்காவும், இந்தியாவும் போதைவஸ்து பொருள் கடத்தல், வர்த்தகம் ஆகியவற்றினை ஒழிப்பதில் பரஸ்பரம் ஒத்துழைப்பதற்கான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

போதை வஸ்து குற்றச் செயல்கள் சம்பந்தமான தகவல்களைப் பரிமாறுதல் சட்ட அமுலாக்கல், பயிற்சி ஆகியன இந்த உடன்பாட்டின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (து)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரவுண் வீதி அரசடிச் சந்தியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இளவாலையைச் சேர்ந்த நல்லையா நற்குணம் (வயது-33)

(7-ம் பக்கம் பார்க்க)

## "தமிழ் மொழியைப் பாதுகாக்க நாவலர் தனி ஒருவராக நின்று செயல்பட்டார்"

(பண்டத்தரிப்பு)

"அந்நியராட்சிக் காலத்தில் தமிழ் மொழியையும், சைவத்தையும் வளர்க்க ஆறுமுகநாவலர் ஆற்றிய பணிகளை நாம் என்றும் மறந்துவிடமுடியாது. யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழிக் கல்வியை மேம்படுத்த இராப் பாடசாலைகளை ஆரம்பிதது நடத்தியும், பல தமிழ் நூல்களை அச்சிட்டும் தொண்டாற்றிய பெருந்தகை அவர்".

இவ்வாறு பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றம் நடத்திய மாதாந்த பௌர்ணமி கருத்தரங்கில் கலந்து கொண்டு 'நாவலரும் தமிழும்' என்ற தலையங்கத்தில் உரையாற்றிய பண்டிதை திருமதி பொன். பாக்கியம் குறிப்பிட்டார்.

மன்றத் தலைவர் சட்டத்தரணி சோ. தேவராசா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பண்டிதை பொன். பாக்கியம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

"ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் தமிழ் மொழியைப் பாதுகாக்க நாவலர் தனி ஒருவராக நின்று செயற்பட்டார். அவர் ஆரம்பித்த இரவுப் பாடசாலைகளில் தமிழ் மொழி கற்பிக்கப்பட்டது. இப் பாடசாலைகளில் கற்பித்த ஆசிரியர்களுக்கு நாவலர் வீடு வீடாகச் சென்று பிடியரிசி சேகரித்து அவற்றை விற்றுப் பணம்சேகரித்துச் சம்பளத்தை வழங்கினார்.

"அஞ்சா நெஞ்சராகவும், மன உறுதி படைத்தவராகவும் திகழ்ந்த நாவலர் பெருமான் எமது யாழ்ப்பாணத்திற்குக் கிடைத்த அரும்பெரும் சொத்து. தமிழையும், சைவத்தையும் கட்டிக்காத்தபெருமை அவரையே சாரும். எமது

(7ம் பக்கம் பார்க்க)

### வளர்முகநாடுகளில்

## அணு ஆயுதங்கள் பரவல் மனித குலத்திற்கு ஆபத்து

(லண்டன்)

சோவியத்யூனியனும் அமெரிக்காவும் அவற்றின் அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை குறைக்கும் முயற்சியிலும் அழித்துவிடும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளஇவ்வேளையில் வளர்முக நாடுகளில் அணுஆயுதங்கள்பரவி வருவது மனிதகுலத்திற்கு ஒரு புதிய பேராபத்தாக உருவாகி வருகிறது.

ஈராக்கிற்கு சட்டவிரோதமாக அணு ஆயுத உபகரணங்களை ஏற்றுமதி செய்வதற்காக சதித்திட்டம் வகுத்த குற்றச்சாட்டின் பேரில் பிரிட்டனில் சிலர் கைது செய்யப்பட்டதை அடுத்து அணு ஆயுதங்கள் பரவிவருவது பற்றி தெரியவந்துள்ளதாக லண்டனில் பாதுகாப்புத்துறை விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரிட்டன், பிரான்ஸ் சீனு ஆகிய நாடுகளே உத்தியோக பூர்வமாக அணுஆயுதங்களை வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

### பெண் கொடுமை

## தண்டனையிலிருந்து தப்பாதிருக்க சட்டம் திருத்தப்படவேண்டும்

### மகளிர் அமைப்புகள் மகஜர்

(சென்னை)

"பெண்களுக்கு கொடுமைகள் இழைப்பவர்கள், தண்டனைகளிலிருந்து தப்பமுடியாதபடி குற்ற நடைமுறைச் சட்டம், இந்திய தண்டனைச் சட்டம், சாட்சிய சட்டம், ஆகியவற்றில் தகுந்த திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்" என்று சென்னை நகர மகளிர் சங்கங்கள். கல்வியாளர்கள், மாணவியர்கள் ஆகியோர் ஜனாதிபதி, பிரதமர், உயர் நீதிமன்ற நீதிபதி ஆகியோருக்கு மகஜர் ஒன்றின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

சென்னை பெண் வழக்கறிஞர்கள் சங்கத்தினர், அனைத்திந்திய ஜனநாயக மகளிர் சங்கத்தினர் ஆகியோரும்சென்னை நகரிலுள்ள மூன்று மகளிர் கல்லூரிகளின் முதல்வர்களும் உட்பட இருநூறு பெண்கள் கையெழுத்திட்டுள்ள இந்த மகஜரின் பிரதி சென்னை தலைமை நீதிமன்ற நீதிபதிக்கும் அனுப்பப்பட்டுள்ளது. [து]

## இந்தக்கடிதத்தின் விலை ரூ. 5 லட்சம்!

(லாஸ் ஏஞ்சல்)

முதலாவது உலகப் போரிலிருந்து சோவியத் யூனியன் விலகிக்கொண்டது பற்றி லியான் லாஷ்ர் என்பவர் விளாதிமிர் லெனினுக்கு எழுதிய கடிதம் ஒன்று ஐந்து லட்சம் ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டது.

இந்தக் கடிதம் சென்ற வாரம் அமெரிக்காவில் இடம்பெற்ற ஏலம் ஒன்றில் இருபத்தியேழாயிரத்து ஐந்நூறு அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

லாஸ் ஏஞ்சலிலுள்ள நகரப் புத்தகக் கடை சொந்தக்காரரான லூயி பெயின்ஸ்டன் என்பவரே இக்கடிதத்தை கடும் போட்டிக்கிடையில் ஏலம் எடுத்தவராவார்.

கடிதத்தை மீண்டும் நல்ல விலைக்கு விற்பதற்காகத் தான் இவ்வளவு தொகையில் விலை கொடுத்து வாங்கியதாக அவர் தெரிவித்தார்.

இதே ஏலத்தில் ஆன்ஸ்ரன் வேல்ஸ் படங்களுடன் எழுதிய கையெழுத்துப் பிரதி ஒன்று நாற்பதினாயிரம் அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. (து)

### முல்லைத்தீவு, கிளிநொச்சி

## கட்டட திணைக்கள ஊழியர்க்கு மூன்று மாத சம்பளம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

மாகாண கட்டிடத் திணைக்களத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சிக் கட்டிடத் திணைக்கள ஊழியர்கள் மூன்று மாதகாலமாகச் சம்பளம் வழங்கப்படாத நிலையில் அவதியுற்று வருகின்றனர்.

மத்திய அரசு கட்டிடத் திணைக்களம், வீடமைப்புத் திணைக்களங்களிலிருந்து மாகாண அரசுக்கு மாற்றம் செய்யப்பட்ட பிரஸ்தாபஊழியர்கள் தமது அவலநிலையையிட்டு விசனம் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சில ஊழியர்கள் திருகோணமலைக்குச் சென்று மாகாணப் பணிப்பாளரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர்களுக்கு மாதம் ஆயிரம்ரூபாவீதம் முற்பணமாக வழங்கப்பட்டதாம்.

பிரஸ்தாப ஊழியர்களுக்கு யார் கொடுப்பனவு செய்வது என்பதில் இழுபறி ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் திணைக்கள அதிகாரிகள் தடுமாற்றம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (54)

## 25 விமானப் பயணிகள் பலி!

(லண்டன்)

அங்கோலாவில் விமானமொன்று கடந்த செவ்வாய்க்கிழமை சுட்டு வீழ்த்தப்பட்டதில் அதில் பயணம் செய்த 25 பேர் கொல்லப்பட்டனர்.

விமானத்தை தாங்களே சுட்டு வீழ்த்தியதாகயுனிட்டா கிளர்ச்சியாளர்கள் உரிமை கோரியுள்ளனர்

படைவீரர்களும், ஆயுதங்களும் விமானத்தில் கொண்டு செல்லப்பட்டதாலே அதனைச் சுட்டுவீழ்த்தியதாக அவர்கள் தெரிவித்தனர். (து)

### யாழ். பிராந்திய

## புதிய கல்விப் பணிப்பாளர் நாளை பதவியேற்பார்

(மன்னார்)

யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளராக திரு. ஏ. ஆர். சுந்தரலிங்கம் நியமனம்பெற்றுள்ளார் தற்சமயம்மன்னார்கல்விப் பணிப்பாளராகக் கடமைபுரியும் திரு. சுந்தரலிங்கம் நாளை 1ம் திகதி தனது கடமையை யாழ்ப்பாணத்தில் பொறுப்பேற்பார்.

இதேவேளையில் மன்னார் கல்விப் பணிப்பாளராக, தற்சமயம் கண்டி கல்வித் திணைக்களத்தில் பிரதம கல்வி அதிகாரியாக் கடமைபுரியும் ஜனாப் எம். குத்துஸ் நியமனம் பெற்றுள்ளார். திரு. சுந்தரலிங்கம் அண்மையில் முதலாம் தர பதவியுயர்வு பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மாட்டு வண்டில் ஏறிய

## குழந்தை படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

மாட்டுவண்டில் சில்லு தலையில் ஏறியதால் நான்கு வயதுப் பெண் குழந்தை ஒன்று படுகாயமடைந்தது.

நேற்றுமுனதினம் சுழிபுரம் பாண்டவெட்டை என்ற இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.

சுழிபுரத்தைச் சேர்ந்த வாகையன் பிரபாஜினி என்ற குழந்தையே படுகாயமடைந்

(6-ம் பக்கம் பார்க்க)

### மணி வாக்கு

உலகில் தற்பெருமை, சினம், அச்சம், பொறாமை ஆகிய அனைத்துக்கும் தன்னடக்கம் இல்லாமையே அடிப்படைக் காரணமாகும்.

—மகாத்மா காந்தி

## நமது நோக்கு

# தபால்கள் சிலவும் குளிக்கப் போகின்றனவா?

தபாற் சேவை மிகத்துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இது பற்றிச் சில நாட்களுக்கு முன்பு குறிப்பிட்டிருந்தோம்.

இரண்டு ஆண்டுகளுக்குப்பின் இரவு ரயில் சேவை களை மட்டக்களப்பு மன்னார் போன்ற பல பகுதிகட்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனால், தபாற் பொதிகளையும் இரவு ரயில் மூலம் எடுத்துச் செல்லும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. எனவே தாமதங்கள் இன்றித் தபால் விநியோகிக்கப்படும் எனப் பொது மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

பொதுவாக, தபால் ஊழியர்கள் சில கஷ்டங்களை அனுபவித்திருந்தார்கள். தபாலகங்கள் பல தமக்குச் சொந்தமாகக் கட்டடங்களை அமைத்துக் கொள்ளாத காரணத்தால், வசதியீனங்கள் தொடரலாம்.

முன்னுரிமை அடிப்படையில், தபாற் கந்தோர்களை நிரந்தரக் கட்டடத்தில் இயங்கவைக்கத் துரித நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

இதேவேளை, வவுனியாவிலிருந்து வந்த செய்தியொன்று பொதுமக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றது. தபாலக வளவில் உள்ள கிணற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்ட தபால்கள் பற்றியதே அச்செய்தியாகும்.

தபால்கள் கிணற்றில் 'குளிக்கப்' போவதுபோல, இயற்கை உபாதையோ என்னவோ, மல கூடங்களுக்குச் சென்ற புகார்களும், செய்திகளும் வந்திருந்தன. இதே போல வெளிநாடுகளிலிருந்துவரும் சில 'கனதியான' தபால்கள், தபாற் பைகளுள் எட்டியும், கைக்கெட்டாத புகார்களும் கூறப்பட்டுவந்தன.

வெளிநாடுகளில் உள்ள சிலர், நாடுகளிடையே பணம் அனுப்புவதற்கான வழிவகைகளை அறிவதில்லை; தபாற்சேவை விதிகளை அறிவதில்லை. டொலர் நோட்டுக்களையும், பணத்தின் வேறுசில 'அவதாரங்களையும்' தபால்மூலம் அனுப்பிப் பறிகொடுத்துவிட்டு, மெல்லவும் முடியாது, விழுங்கவும் முடியாத நிலையில் தத்தளித்த கதைகளும் உண்டு.

முறையாக வரும் காசோலைகள் போன்றவையே மாயமாக மறையும் காரணங்கள் உடனுக்குடன் விசாரிக்கப்பட வேண்டும். கையாடல் மாபெரும் குற்றமாதலின் உரிய தண்டனை வழங்கப்படவேண்டும்.

ஒரு சிலர் செய்யும் தவறுகளால், முழுத் தபால் திணைக்கள ஊழியருமே தலைகுனிய வேண்டியுள்ளது.

நாட்டு நிலைமை சீரடைந்து வருவதால், கண்காணிப்புகள் அதிகரிக்கப்பட்டுப் பொதுமக்கள் புகார்கள் குறைய வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

தபால் ஊழியர்களும் தமது சேவையின் புனிதத்துவத்தை நிலைநாட்டப் பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்பதை வலயுறுத்த விரும்புகிறோம்.

# செய்வன திருந்தச் செய்த செம்மல் பெரியார் இன்றில்லை



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்தவர் அமரர் மு. வைரமுத்து அவர்கள்.

அளவெட்டியைச் சேர்ந்த முருகேசுவிற்கும் வள்ளியம்மைக்கும் ஐந்தாவது புதல்வனாகப் பிறந்தவர். கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் எஸ். எஸ். சீ. பரீட்சையிலும், லண்டன் மற்றிக்குலேஷன் பரீட்சையிலும் சிறப்பாகச் சித்தியடைந்தார். குடும்பச் சூழ்நிலை காரணமாக பல்கலைக்கழகம் புகமுடியாததை எண்ணி என்றும் வாடியவர்.

இலிகிதர்சேவையில் சேர்ந்த இவர் தமது சேவையில் கருத்தூன்றி ஈடுபட்ட காரணத்தினாலும் விடாமுயற்சியாலும் படிப்படியாக முன்னேறினார். பல அமைச்சர்களது நன்மதிப்பைப் பெற்றிருந்தார்

1920 ல் இலிகிதரானவர், 1928 ல் கணக்காளரானார். ஐந்து வருடங்களுக்குள் கணக்காய்வு உயர்தர மேற்பார்வையாளரானார். அது ஒரு பதவி நிலை நியமனம் (Staff Appointment)

1942-யுத்தகாலம் - பாராளுமன்றம் கலைக்கப்பட்டு சிவில் நிர்வாகம்நடந்தநேரம். சேர். ஒலிவர் குணத்திலகா உள்நாட்டுப் பாதுகாப்பு ஆணையாளரானார். அப்போது அமரர் வைரமுத்து உதவி ஆணையாளரானார். பொறுப்புள்ள பதவி; சிறப்புடன் பணியாற்றிப் பெயர் பெற்றார்.

1954- யுத்தம் முடிந்தது- புதிய நிர்வாகம் அமைந்தது. தேசாதிபதியின் உதவியாளர்கள் மூவர்: நிதி, நீதி, நிர்வாகச்செயலாளர்கள். இவர்நிதித் துறைச் செயலாளரின் உதவிச் செயலாளராகப் பணிபுரிந்தார். இப்பதவி இவருக்குக் கிடைத்தது. நடைமுறையிலிருந்த விதிகளுக்கு அப்பாற்பட்டது' விசேட நியமனம் இதுவாக இருந்தது.

1948 ல் இலங்கை சுதந்திரப் பெற்றதும் சேர் ஒலிவர் குணதிலகா உள்நாட்டு விவகார அமைச்சரானார். அவரின் அந்தரங்கச் செயலாளராகவும், அமைச்சுச் செயலாளராகவும் இவர் பணிபுரிந்தார்.

லண்டனுக்கு ஸ்தானிகராகச் சென்ற ஒலிவரின் செயலாளராகச் செல்லும்படி கேட்டும் மறுத்துவிட்டார். பல அமைச்சுகளின் செயலாளராகக் கடமையாற்றிய பெருமை இவருக்குண்டு.

56வது வயதில் இளைப்பாறிய பின் இவரது சேவை வேறு துறைகளிற் பளிச்சிட்டது அரசு நியமித்த பல ஆணைக் குழுக்களின் செயலாளராகப் பணிபுரிந்திருக்கிறார். குறிப்பாக இந்து ஆலய நிர்வாகம் பற்றி விசாரித்த ஆணைக்குழுவில் அவர் ஆற்றிய பணிஅளப்பரியது.

தருமச் சொத்துக்கள் சட்டக் குழு, அரச ஊழியர் சம்பள விசாரணைக் குழு போன்றவற்றில் இவர் தனது முத்திரையைப் பொறித்துள்ளார். பொதுநிறுவனங்கள் பலவற்றின் நிர்வாகத்தைச் சீர்படுத்த இவர் எடுத்த முயற்சிகள் எழுத்தில் அடங்கா.

சமயப் பணியில் இவர் கவனம் சென்றிருக்கின்றது. தொட்ட பணிகள் அனைத்தும் துலங்கிடச் செய்திருக்கிறார். விவேகானந்த சபை, இராமகிருஷ்ண மிஷன் ஆகியவற்றோடு நெருங்கித் தொண்டாற்றினார். தமிழ் நாட்டுப் பெரியார்கள், துறவிகள் ஆகியோர் வருகை தந்திருந்த போதெல்லாம் அன்னாரின் ஓயாத பங்களிப்பு பலருக்கு நல்ல வழிகாட்டியாக அமைந்திருந்தது.

சைவ நூல்கள் பலவற்றையும் பலரும் அறியும் வண்ணம் நடத்தப்பட்ட சித்தாந்தவகுப்புகள், சமயச் சொற்பொழிவுகள் ஆகியவற்றை யார்தான் மறக்கமுடியும்?

இவரதுசமயச்சொற்பொழிவுகளை வானொலிமூலம் கேட்ட மதுரை ஆதீனத்தவர்கள் 'சித்தாந்தச் செம்மல்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தார்கள்.

மானிப்பாயில் இந்துசமய அபிவிருத்திச் சங்கம் நிறுவி பதினொரு வருடங்கள் தலைவராகக் கடமையாற்றிச் சைவப் பணி புரிந்திருக்கிறார் பல கோயில் நிர்வாகங்களின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த அரசாங்க அதிபரின் வேண்டுகோளை ஏற்றுப் பணிபுரிந்திருக்கிறார்.

இப்படியெல்லாம் பல்வேது துறைகளிற் பணியாற்றிப் புகழ்பெற்ற இவர் தமது நண்பர் ஒருவருக்குக் கூறியது என்ன?

''எனது பாக்கியம் யோகர் சுவாமிகளின் சகவாசம்; 40 வருடகால நெருங்கிய தொடர்பு. அவரின் புத்திமதிகள், உபதேசங்கள், அன்பான வார்த்தைகள்!''

மாணவனாயிருந்தபோது சமயபாடத்திற்காகப் பெற்ற தங்கப்பதக்கம், 1953ல் பிரித்தானிய அரசியின் முடிசூட்டு விழாவின் போது கிடைத்த வெள்ளிப்பதக்கம், சமாதான நீதவான் பட்டம் போன்றவற்றை விட யோகரின் அன்பான வார்த்தையே இவரது

(6ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

# அதிபர்கள் நியமனம் சீராகுமா?

அதிபர் தரம் I, II, III என தற்போது கடமையாற்றி வரும் அதிபர்கள் குறிப்பிட்ட தரங்களில் பத்தாண்டுகளுக்கு மேல் கடமை பார்த்தும் தரம் உயர்த்தப்படாமல் அதே தரத்தில் ஒரே சம்பளத்தில் இன்றும் இருந்துவருகிறார்கள். குறிப்பிட்ட சில ஆண்டுகள் கடமையாற்றிய அதிபர்களுக்குச் சேவை மூப்பு அடிப்படையில் அதிபர்பதவி உயர்வு அளிக்கப்படுவதில்லை. அல்லது அதிபராகப் பல்வேறு தரங்களில் இருப்போருக்குப் பரீட்சை ஏதும் நடாத்திப் பதவி உயர்வு கொடுக்கும் நிலையும் இன்று அமுலில் இல்லை. இதனால் ஒரே தரத்தில் பல ஆண்டுகள் கடமையாற்றும் அதிபர் இளைப்பாறும்போதும் அதே தரத்திலிருந்தே இளைப்பாறுகின்றார்.

ஆனால் சீனா போன்ற நாடுகளில் ஒரு அதிபர் 3 ஆண்டுகள் ஆரம்ப பாடசாலை அதிபராக இருந்ததும் பின்னர் படிப்படியாகப் பதவி உயர்வு பெறும் நடைமுறை காணப்படுகின்றது.

இதே நேரம் எமது பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளுள்ள பாடசாலையில் ஒரு ஆசிரியர் பதிலதிபராக இருந்தால், அவர் பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்தாலென்ன, பட்டதாரி ஆசிரியராக இருந்தாலென்ன சில ஆண்டுகள் பதில் அதிபராகக் கடமையாற்றினால் தரம் Iற்குப் பதவி உயர்வு கொடுக்கும் நடைமுறையிருக்கிறது. பரீட்சை எடுத்துச் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்குச் சென்று நிரந்தர அதிபராகப் பதவி உயர்வுபெற்றோர் பதவி உயர்வு பெற எதுவித வசதி செய்து தரப்படாமலிருக்கப் பதிலதிபர்களை நிரந்தரமாக்கும் நடைமுறையும் இருந்து வருகின்றது.

பதிலதிபர்களை நிரந்தர அதிபர்களாக இருக்க வகைசெய்யப்பட்டுள்ள நிலையில், நிரந்தர அதிபர்கள் குறிப்பிட்ட கால எல்லையில் பாடசாலை வேறுபாடின்றிப் பதவி உயர்வு பெற சேவை மூப்பு அடிப்படை கவனிக்கப்படவேண்டும். இதனால் நூற்றுக்கணக்கான தரம் I, II, III அதிபர்கள் பயனடைய வாய்ப்பேற்படும் பூனைக்கு மணி கட்டுபவர் யார்? நிரந்தர அதிபர்கள் இதுபற்றிச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய காலம் இது.

ந. சிவபாதம்,
(அதிபர்)
ஆனைக்கோட்டை.

## தவக்கால நற்சிந்தனை

### எவ்வாறு என்னில் புனிதம் பெறவேண்டும்?

செபங்களிலும் உண்ணா நோன்பிலும், தருமம் கொடுப்பதிலும், பிற செயல்களிலும் இந்நாள் புனிதம் பெறவேண்டும் உண்மையில் வேறு நாட்களில் சோம்பித்திரிபவர்களை இப்புனித நாட்கள் தட்டி எழுப்பவேண்டும். இவ்வுலக வாழ்வில் இதுவே நம்முடைய தாழ்ச்சியின் காலம். நமக்காக ஒரு முறை இறந்து பாடுபட்ட ஆண்டவராகிய கிறிஸ்து ஒவ்வொரு ஆண்டும் பாடுபட விரும்புகின்றார். நம் வாழ்வைப் புதுப்பிக்க எல்லாக் காலத்திலும் ஒரே முறையாக நிறைவேறிய நிகழ்ச்சியை நம் நினைவில் நிறுத்த ஒவ்வொரு ஆண்டும் வந்து போகின்றது நம் வாழ்வு முழுவதும் உண்மைப்பக்தியில் நடக்கத் தாழ்ச்சி இதயமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்றால் நம் தாழ்ச்சியின் காலமாகிய இந்நாட்களில் எவ்வளவு அதிகமாகத் தாழ்ச்சியில் படிந்திருக்கவேண்டும்.

''உன்னைப்போல் உன் அயலானையும் நேசி'' என்கிறார் கிறிஸ்து.

அவரது வார்த்தைக எமது மனக்கண்களை திறக்கவேண்டும். அவரை ஏற்று அவரின் செயல்களை, வார்த்தைகளை அன்போடு கேட்டு சமாதானம் நிலைக்க ஒருவர் வரை புரிந்து வாழ்வதில் வெற்றி காண்போமா? அயலானுடைய கஷ்டங்களும் நமது கஷ்டங்களும் ஒரே சீராய் இருப்பின், நமது தேவைகளை கேட்டு பூர்த்தி செய்துகொள்ளலாம். பிறரின் மிகப்பெரிய ஆன்ம இரட்சணிய தேவைகளைக் கேட்டுச் செய்கின்றான் என்றால், அவனுக்கு உதவி செய்யலாம் எனும் நம்பிக்கையும் இருக்கின்றது அப்பொழுது நமது உயிருக்கே ஆபத்து வரக்கூடுமாய் இருப்பினும் அதனைப் பொருட்படுத்தாது, அந்த ஆன்ம உதவியை அவனுக்குச் செய்யவேண்டும் ஆத்தும இரட்சணியம், நமது சரீர தேவைகளைவிட உயிரையும் விட மேலானது இதனை முன்னிட்டுத்தான்.

அருட் சகோ.
ம. கிறேஷன்
C. M. S. F.

## பலதும் பத்தும்

### குரும்பசிட்டி

பலாலி விமான நிலையத்திற்கு அண்மையில் இருப்பதால்...அதன் Site Value, அதாவது இடப்பெறுமானம், சில காலத்திற்குமுன் குறைந்துதான் இருந்தது; அவ்வளவுக்கு சேதங்கள், இழப்புக்கள்!

அந்த ஊர் நல்ல மண்ணுக்குப் பேர் போனது. காய்கறிகள் மாத்திரமா விளைகின்றன? ... இல்லை இல்லை. கலை, இலக்கியமும் செழித்து வளர்கின்றன, சன்மார்க்க சபையின் புண்ணியத்தால்!

சிறுகதை, விமர்சன் அரங்கு, பாராட்டு விழாக்கள், ஈழத்து நூல்களின் கண்காட்சி, நினைவு நாள் விழாக்கள்...... சளையகற்றி, களை கட்டி நிற்கிறது!

அந்தச் சபைக்கு வயது 55. இலக்கியப் பணியைவிட. விவசாயச் சேவை, சுகாதாரச் சேவை, சமயச் சேவை... இப்படிப் பல சேவைகள்!

வெளிநாடுகளிலுள்ள அக்கிராமவாசிகள் இன்னும் பிறந்த மண்ணை மறக்கவில்லை. பண உதவி செய்துகொண்டிருக்கிறார்கள் பணிகளுக்கு.

குரும்பசிட்டி...சன்மார்க்க சபை...அந்த மக்கள் பாக்கியசாலிகள்தான்!

### நாளை....!....?

நாளை ஏப்பிரல் ஒன்று ... 'அந்தத்' தினம் ... ! நல்ல வேளை — விடுமுறைநாள்... அலுவலகங்களில் பாடசாலைகளில், 'அது' வாகின்ற வாய்ப்புக் குறைந்து விட்டது!

''தத்துவ மஸி — நீ அது வாகின்றாய்!'' — இதுவேத மகா வாக்கியம்!

''நாளை நீ 'அது' வாகி விடாதே!'' — இது நவீன சிறிய வாக்கியம்!

வாணி

# "மக்கள் நம்பிக்கை வைக்கும் நிறுவனங்களே நிலைத்து நிற்கும்"

## - சர்வோதய பிரதிநிதி

(அச்சுவேலி)

''தத்தமது கிராமங்களில் உள்ள வளங்களையும் வசதிகளையும் பயன்படுத்தி மக்கள் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்வதுடன் கிராமத்தின் வளர்ச்சியையும் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும்.''

இவ்வாறு சர்வோதய பிரதிநிதி செல்வி எஸ் அஞ்சலா துணுக்காய்-கொக்காவில வீதி சர்வோதய சிரமதான சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கூறினர்.

கிராமசேவையாளர் திரு எஸ். இரத்தினகோபால் தலைமையில் நடைபெற்ற இச்கூட்டத்தில் செல்வி அஞ்சலா தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது;

மக்கள் நம்பிக்கை வைத்து செயற்படும் அமைப்புக்களும் நிறுவனங்களும்தான் நிலைத்து நின்று மககளுக்கு சேவையாற்ற முடியும் சர்வோதய அமைப்பு மக்களின் வளர்ச்சிக்கான அமைப்பு. அதன மீது மக்கள் நம்பிக்கை வைதது அதன் செயற்திட்ட நடைமுறை ஆக்கங்களுக்கு தமது முழுமையான பங்களிப்பை நல்கவேண்டும். அதன் மூலம் மக்கள் தம்மை வளர்த்துக் கொள்வதுடன் தமது சேவைக்கூடாக கிராமத்தையுமவளாத்துக்கொள்ளலாம்

சர்வோதய சிறுவர் பாடசாலைக்கும் சர்வோதய சிரமதான சங்கத்திற்கும் ''ஒளி விளக்கு சிறுவர் பாடசாலை'' ''ஒளிவிளக்கு சர்வோதயசிரமதான சங்கம்'' எனப்பெயர்கள் சூட்டப்பட்டன. (74)

# உடுவிலில் புத்தாண்டு போட்டிக்கு ஏற்பாடு

(உடுவில்)

புத்தாண்டுதினக் கொண்டாட்டங்களையொட்டி உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலும் பல விளையாட்டுப்போட்டிகளை நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தாச்சிப்போட்டி கயிறு இழுத்தல் போட்டி, பெண்களுக்கானகயிறடித்தல், மென்பந்து - கிரிக்கட் போட்டி மற்றும் நாட்டுப்பாடல் போட்டி ஆகியன நடைபெற உள்ளன.

உடுவில் உதவி அரசாங்க அதிபர்பிரிவுக்குட்பட்டகிராம சேவை அலுவலர் பிரிவுகளில் வசிப்பவர்கள் மட்டுமே இப்போட்டிகளில் பங்குபற்றலாம். முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

நாட்டுப் பாடல் போட்டி தவிர்ந்த ஏனைய போட்டிகளில் முதலிடம் பெறுவோர் உதவி அரச அதிபர் பிரிவு மாவட்டப் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

கிராமசேவையாளர் பிரிவு மட்டபோட்டிகள் ஏப்ரலில் முதல்வாரத்திலும் உதவி அரசாங்க அதிபர் மட்டத்திலான போட்டிகள் ஏப்ரல் 15ம் திகதியும் நடைபெறும்.

சிங்கள - தமிழ் புதுவருடம் பற்றிய நாட்டுப்பாடல்போட்டிகளில் பாடசாலை பிள்ளைகளும் பங்குபற்றலாம், கிராம சேவையாளர் பிரிவில் தெரிவு செய்யப்படும். முதல் மூன்று பேர் உதவி அரச அதிபர் மட்டப்போட்டியில் பங்குபற்றுவர். (109)

# சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பணிமனை புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

கடந்தகால அசம்பாவித சம்பவங்களின்போது பெரும் சேதமடைந்த சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனை சுமார் ஒன்பது லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதன் கட்டிட வேலைகள் யாவும் தற்போது பூர்த்தியடையும் நிலையில் உளளன. நவீன வசதிகளுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள இப்பணிமனையின் திறப்பு விழா அடுத்தமாதம் ஒன்பதாம் திகதியன்று சிறப்பாக நடைபெறவுள்ளது என்றும் இதில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு அன்ரன் அல்பிரட் கலந்துகொண்டு புதிய கட்டிடத்தை சம்பிரதாய முறைப்படி திறந்துவைப்பார் என்றும் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சிவசம்பு தெரிவித்தார். (72)

# "தமிழ்மொழிக்கென ஒரு நாடும் கொடியும் உருவாக வேண்டும்"

(அச்சுவேலி)

'ஈழத் தமிழர்களின் வாழ்வில் அமைதி நிலையும் விடுதலை ஒளிக்கீற்றும் தென்படும் இன்றைய சூழ்நிலையில் தமிழ்த்தின விழாக் கொண்டாடுவது மிக மகிழ்ச்சியான நிகழ்வாகும்.''

இவ்வாறு பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். சிவராசரட்ணம் மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலகப் பிராந்திய பாடசாலைகள் இடையே நடைபெற்றதமிழ்த் தினப்போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினர்.

கோட்ட தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. எஸ். சிவகுருநாதன் தலைமையில் உடுவில் மகளிர் கல்லூரியில் இப்போட்டி நடைபெற்றது.

திரு. எஸ். சிவராசரட்ணம் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது: தமிழ் மொழியின் சிறப்பும் தொன்மையும் மிக மேலானது. இற்றைக்கு 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மிகநுண்ணிய ஒலி அளவுகள் எல்லாம் தமிழ் மொழியில் வகுக்கப்பட்டது இதனை தொல்காப்பியம் மூலம் அறியலாம்.

இத்தகைய ஒலிக் கணிப்பு இன்றைய நவீன கம்பியூட்டர்களினுல்கூட மதிப்பிட முடியாது எனக் கூறலாம். இத்தகைய துல்லியமான ஒலி அளவுக் கணிட்பீடுகளை 2 ஆயிரம் ஆண்டுக்ளுக்கு முன்னரேதனக் காக்கிக் கொண்டது என்ருல் தமிழ் மொழியின் சிறப்பை சொல்லித்தான் தெரியவேண்டுமா?

ஆங்கிலமொழி உலகமொழியாக வளர்ந்தது என்ருல், அதற்கென்று நாடுகள், கொடிகள், சூரியன் அஸ்தமிககாத சாம்ராச்சியத்தைக் கொண்டதாக இருந்ததே ஆகும்.

ஆனுல்எமதுதமிழ்மொழிக்கு என ஒரு தனி நாடு இல்லை. கொடிகள் இல்லை. இந்தநிலை எதிர்காலத்திலும் தொடராமல்தமிழ்மொழிக்கென நாடும், கொடியும் உருவாகவேண்டும். நாட்டு அரசின் மொழியில் தமிழ் நிலைபெற்று வளரவேண்டும்.

மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலககல்வி அதிகாரி திரு. கே. குலசேகரம் விழாவைத் தொடக்கிவைத்துஉரையாற்றும்போது; ''மிக நெருக்கடியான கால வேளைகளை எல்லாம் தாண்டி எமது மொழி வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்றும் அதன் பெருமை எதிர்காலத்தில் மேலும் உறுதியாகும் என்றும் கூறினர்.

மாணவர்கள்மத்தியில் தமிழ் மொழியாற்றல் வளர்க்கப்படுவதை குறிக்கோளாகக் கொண்டு ஆசிரியர்கள் மாணவர்கள் தமிழ் விழாவில் ஆர்வத்துடன் கலந்துகொண்டிருப்பது பெருமகிழ்ச்சியைத் தருகின்றது'' என்றும் கூறினர். (74)

ப. நோ. கூ. சங்க

# இருப்பு விற்பனை நிலையம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைபலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வல்வெட்டித்துறையில் இரும்பு விற்பனை நிலையமொன்றைத் திறந்து வைத்துள்ளது.

இவ்இரும்பு விற்பனைநிலையத் திறப்பு விழா சங்க இயக்குநர் சபைத் தலைவர் திரு. எஸ். காந்திதாஸன் தலைமையில் நடைபெற்றது. சங்க களஞ்சிய தொழிலாளி திரு. எஸ் சிவமூர்த்தி சம்பிரதாயபூர்வமாக விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்தார். நிலையத்தின் முதலாவது விற்பனையை சங்க இயக்குநர் திரு. காந்திதாஸன் ஆரம்பித்து வைத்தார். (52)

மத்திய கிழக்கிலுள்ள

# இலங்கையரால் கடந்த வருடம் 1,600 கோடி ரூபா வருமானம்

(சொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பார்க்கும் இலங்கையர்கள் கடந்தவருடம் 1600கோடி ரூபாவைஇலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள நான்கு லட்சம் இலங்கையர்களில் பெரும்பாலான பெண்கள்வீட்டுப்பணிப்பெண்களாக கடமையாற்றுகின்ருர்கள்.

இந்தத் தொகை இந்த வருடம் இரண்டாயிரம் கோடி ரூபாவாக அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1991ம் ஆண்டு சுமார் ஆறு லட்சம் இலங்கையர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்வார்களெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

வேலை பார்க்கும் இலங்கையர்களுக்கு ஆலோசனை வழங்கும் நிலையங்கள் முதன்முதலாக அடுத்தமாதம் குவைத், சவுதிஅரேபிய நாடுகளில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இடம் பெயர்ந்து சென்ற இலங்கையர்கள், குறிப்பாக மேற்கு ஆசியாவிலுள்ள வீட்டுப் பணிப் பெண்கள் எதிர் நோக்கும் பல பிரச்சனைகளைத் தீர்த்துவைக்கும் முகமாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மத்திய கிழக்கில் இந்த ஆலோசனை வழங்கும் நிலையத்தைத் திறந்துவைக்கவுள்ளது. (து)

# லொறி விபத்தில் சாரதி பலி!

## உரிமையாளரும் மனைவியும் காயம்

[யாழ்ப்பாணம்]

தார்ப்பீப்பாக்களுடன் கொழும்பிலிருந்து வந்த லொறியொன்று வீதியில் மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானர். ஒரு பெண் உட்பட இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன் தினம் அதிகாலை நாலரை மணியளவில் அனுராதபுரத்திற்கும் றம்பாவைக்கும் இடையில் சாளியபுரம் என்ற இடத்தில் இடம்பெற்ற விபத்தில் லொறிச்சாரதியே ஸ்தலத்தில் பலியானவராவார்.

லொறிச்சொந்தக்காரரான யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் அருமைநாயகம் (வயது 36) அவரது மனைவி இராசலட்சுமி அருமைநாயகம் [வயது 38] ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் உடனே வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்று அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து இராசலட்சுமி என்பவர் யாழ் ஆஸ்பத்திரிக்கு மாற்றஞ்செய்யப்பட்டுள்ளார்.

சாரதியின் உடலம் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (56)


# மக்கள் வங்கி

## அடகு நகைகள் மீளளித்தல் கிளிநொச்சி மாவட்டம்.

பின்வரும் கிளைகளில் அடகு வைத்த நகைகளை மீளப்பெற்றுக்கொள்வதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள், கிளிநொச்சி தபால் நிலையத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பணக் கரும பீடத்தில் வைத்து, கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படும்.

| | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|
| 1. பரந்தன் கிளை (1989-09-27 வரை | 1990-04-02 | திங்கள் |
| பணம் செலுத்தியவர்களுக்கு) | 1990-04-03 | செவ்வாய் |
| 2. கிளிநொச்சிக் கிளை (1989-06-23 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 1990-04-04 | புதன் |

மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 1-00 வரை அடகு நகைகளை மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி இரசீது ஆகியவற்றுடன் சமுகந் தந்து நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பிராந்திய முகாமையாளர்.
மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

(ஏ 644)


# மிகவும் பாதிக்கப்பட்ட கிராமங்களில் கூடுதல் கவனம் எடுக்கப்படும்

(காங்கேசன்துறை)

''கடந்தகால வன்செயல்களின போது வலி வடக்கில குறிப்பிட்ட சில கிராமங்கள மிகவும் பாதிக்கபபட்டன. இதில் குரும்பசிட்டிக் கிராமம் ஒன்றுதப புனரமைப்பு, புனர்நிர்மாணத் திட்டங்களின் கீழ் இப்படியான பகுதிகளில் கூடுதலான கவனம் எடுக்கப்படும்.''

இவ்வாறு குரும்பசிட்டி கிழக்கு கிராமசேவையாளர் அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு அலுவலகத்தைத் திறந்துவைத்துப் பேசிய வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையா கூறினர்.

(6-ம் பக்கம் பார்க்க)

# "இந்திய வல்லாதிக்கம் புலிகளால் முறியடிப்பு"

## - பாப்பா

(யாழ்ப்பாணம்)

"'இந்திய வல்லாதிக்கம் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது. இதற்கு விடுதலைப் புலிகளின் இராஜதந்திரமே காரணம். கடந்த இரண்டரை வருட காலமாக இந்திய அமைதிகாக்கும் படையின் சுற்றிவளைப்பினுல் ஒரு நாளைக் கழிப்பது ஒரு வருடத்தைக் கழிப்பதிலும் மிகவும் கஷ்டமான காரியம். இவ்வளவு கஷ்டங்களையெல்லாம் கடந்து தற்போது மக்கள் முன் நிற்கின்றோம்."

இவ்வாறு தென்மராட்சி விடுதலைப் புலிகள் இயக்கப் பொறுப்பாளர் திரு பாப்பா மட்டுவில் கமலாசினி வித்தியாசாலையில் நடைபெற்ற விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கலந்துரையாடலில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. பாப்பா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"அமெரிக்கா - ரஷ்யா, ஈரான் - ஈராக் போன்ற ஒன்றுக்கொன்று பகையான நாடுகள் பேச்சுவார்த்தை மூலம் தமது பிணக்குகளைத் தீர்க்கும் போது நாம் ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் தவறில்லை. இது அரசுடன் கூட்டுச் சேர்ந்து தமிழினத்தை அழிப்பதாகாது. மீண்டும் ஒருமுறை தமிழினம் ஏமாற்றப்படமாட்டாது இனி வருங்காலத்தில் சகல உரிமைகளையும் கட்டிக் கேட்போம். தமிழீழத்தி தான் நாம் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளோம்."

இக்கருத்தரங்கு மட்டுவில் வடக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு செ. சிவராசா தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர் திரு. சரவணமுத்து, திரு. கந்தண்ணை, டாக்டர் பே. எட்வேட் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். (54)

# வளர்மதி சனசமூக நிலையம் புனர்வாழ்வு நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையம் கடந்தகால வன்செயல்களினல் பாதிக்கப்பட்ட நிலைய எல்லைக்குட்பட்ட மக்களுக்கு குடும்ப நிலைக்கு ஏற்ப புனர்வாழ்வு நிதி வழங்கி வருகிறது.

சுவிஸ் நாட்டிலுள்ள மேற்படி நிலைய உறுப்பினர்களின் நிதி உதவியினுலே பாதிக்கப்பட்டவர்களுக்கு இவ் உதவி வழங்கப்படுகிறது

கடந்த வாரம் நான்கு குடும்பங்களுக்கு இந்நிதி வழங்கப்பட்டது.

திருமதி நாகம்மா சின்னத்தம்பி, செல்வராணி தம்பிராஜா, ஜெயலதா யோகராஜா, பாககியம் யோகலிங்கம் ஆகியோருக்கு நிலைய ஸ்தாபகர் திரு. பொ. நாகமணி, தலைவர் திரு. பி திலைநாதன் ஆகியோர் பண உதவியை வழங்கினுர்கள்.

மேலும் பலருக்கு இந்த உதவிகள் வழங்குவதற்கு சுவிஸிலுள்ள தமது உறுப்பினர்கள் பணம் சேகரித்து வருவதாக நிலையப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (து)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



### திரு. கந்தையா யோகநாதன்

தோற்றம்: 01-10-1947 மறைவு: 01-03-1990

கடந்த 01-3-90 அன்று இயற்கையெய்திய இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தரும் பெருந்தெருக்கள் பராமரிப்பு ஒப்பந்தகாரருமாகிய திரு. கந்தையா யோகநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியையும் சபிண்டீகரணமும் எதிர்வரும் 2-4-1990 திங்கட்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும். இக்கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, தாய், குடும்பத்தினர்.

பழைய ஆஸ்பத்திரி வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(சி-3661)

## மாட்டு வண்டில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தது.

சம்பவதினம் மாடுபூட்டிய படியே புறப்பட ஆயத்தமாக நின்ற வண்டியின் சில்லில் ஏறி விளையாடிய குழந்தையைக் கவனிக்காத தந்தை வண்டிலைச் செலுத்தியபோது குழந்தை சில்லுடன் சுழன்று வந்து சில்லுக்குள் அகப்பட்டே நெரிந்ததாகவும் குழந்தை குளறிய சத்தம் கேட்டு வண்டியை நிறுத்திப் பார்த்தபோதே குழந்தை நெரிபட்டது தெரியவந்ததாகவும், இச்சம்பவம் பற்றித் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த குழந்தை நினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. [56]

## மிகவும் பாதிக்கப்பட்ட

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர் க. இரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உதவி அரச அதிபர் மேலும் பேசுகையில்:- கிராமசேவை அலுவலர்கள் தமது கடமைகளைச் சரிவர ஆற்றவேண்டுமெனவும், இப்பகுதி முன்னுள் கிராமசேவை அலுவலர் திரு. எம். ஸ்கந்தராஜா சிறப்பான பணியாற்றியுள்ளாரெனவும் புதிய கிராமசேவையாளர் பெண்ணுக இருந்தாலும், அவரும் சிறப்பாகப் பணிபுரிவார் என எதிர்பார்ப்பதாகவும் கூறினுர்.

மற்றும் அப்பகுதிப் பிரமுகர்கள்; திரு. மு. திருநாவுக்கரசு, திரு. பொ. பாலகுமார், திருமதி தம்பித்துரை, திரு. வி. பாலசுப்பிரமணியம். திரு. க, சுப்பிரமணியம், கிராம சேவை அலுவலர் திரு. எம். ஸ்கந்தராசா ஆகியோரும் உரையாற்றினர். (86)

## செய்வன

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளுக்கு உற்சாகமும் ஊக்கமும் அளித்தது என்பதைக் கேட்கும்போது மெய்சிலிர்க்கின்றது.

நீதியீனம் கண்டு பொறுக்க மாட்டார்; கோபம் கொள்வார் "அது அப்படித்தான்!" இது யோகர் அது பற்றிக் கொடுத்த ஆறுதல்வார்த்தை.

இத்தகைய மாமனிதர் இன்றில்லை. இறுதிச் சடங்குகள் நடக்கும் இன்றைய நாளில் அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

- அன்பர்

# இப்படியும் நடக்கிறது

கொழும்புக்குப் போனுல், நாலு (உள்நாட்டு-வெளிநாட்டு) பத்திரிகையாளர்களைச் சந்திக்காவிட்டால்'ஏதோ' மாதிரி இருக்கும். (தொழிலே இதுதானே!)

பத்திரிகை அலுவலகங்களுக்கு செல்லாவிட்டாலும்; வெளிநாட்டு செய்தி நிறுவனங்களுக்குச் சென்று இன்றைய நாட்டு நடப்புப் பற்றி 'தாராளமாக' கடந்த வாரம் விசாரித்தேன்.

குறிப்பாக ஒரு விஷயம் பற்றி துருவித் துருவிக்கேட்ட போது, எதையுமே கூறுமல் என்னிடமே கதை எடுக்கப் பார்த்தார்கள் உள்நாட்டுச் செய்தியாளர்கள்!

நம்நாட்டுச் செய்தியாளர்கள்தான் 'கப்சிப்' என்றல் வெளிநாட்டுச் செய்தி நிறுவன நிருபர்களும் 'மூச்சு' விடுகிறுர்களில்லை! அந்தளவுக்கு அந்தச் செய்தி 'எரிமலை' யாகியிருக்கிறது.

குறிப்பு; நான் அவர்களிடம் கேட்ட விஷயம்: அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்ட பத்திரிகையாளர் திரு. றிச்சர்ட் டி சொய்ஸா பற்றித்தான்.

மேலதிகக் குறிப்பு; திரு. றிச்சர்ட் டி சொய்ஸா கொல்லப்பட்டதும், அவரது நெருங்கிய பிரபல பத்திரிகையாளர்கள் இருவர், நமக்கு ஏன் வம்பு என்று, நாட்டைவிட்டே ஓடிவிட்டனராம்!

அடிக்குறிப்பு; 'எரிமலை' கள் எதுவும் சொல்லிக்கொண்டு வெடிப்பதில்லை.

'ஊடுருவ

## "சிலப்பதிகாரம் தந்த கோவலன்"

# நாட்டுக் கூத்து

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் கலாசார விழாக்களும், விளையாட்டுவிழாக்களும் நடந்தேறி வருகின்றன. அந்த வரிசையில் 18-03-1990ம் திகதி முதல் ஒரு வார காலமாக முல்லைதீவு மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் 'சிலப்பதிகாரம் தந்த கோவலன்' என்ற நாட்டுக் கூத்து அரங்கேற்றப்பட்டு வருகின்றது. புதுக்குடியிருப்பு அண்ணுவியார் திரு. வே. சுப்பிரமணியத்தின் இசை ஆட்டத்தில் உருவான இக்கூத்தினை முல்லைத்தீவுக் கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரிதிரு. செ. மெற்றுஸ்மயில் அவர்கள் தயாரித்து, நெறிப்படுத்தியுள்ளார். நாட்டுக் கூத்து மரபில் பல புதுக்கலைகளைப் புகுத்திய இக்கூத்து முல்லைத்தீவு மாவட்ட மக்களின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றுள்ளதோடு, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரினதும் நன்மதிப்பையும் பெற்றுள்ளது. முல்லைத்தீவில், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை ஆகிய கிராமங்களில் 'கோவலர் கூத்து' ஆண்டுதோறும் அரங்கேற்றப்படுவது வழக்கம். முள்ளியவளையிலும், புதுக்குடியிருப்பு முத்துமாரியம்மன் கோவில் முன்றலிலும் வட்டக்களரி அமைத்து, தீப்பந்த ஒளியில் கூத்து ஆடப்படுவதுண்டு. சிலாவத்தை சிவகுரு அண்ணுவியார் திரு. வே பொன்னம்பலம், திரு. வே. சுப்பிரமணியம் ஆகியோர் இக்கூத்தின் முக்கிய அண்ணுவிமார்கள். இரவு முழுவதும் ஆடப்படும் இக்கூத்தினை, மக்கள் பாயுடன் சென்று அமர்ந்து பார்ப்பது வழக்கம்.

**க. சரவணபவன்**
(செம்மலைக் கொத்தணி அதிபர்)

சுமார் இரண்டு மணி நேரம் ஆட்டப்படும் கூத்தாக இது சுருக்கப்பட்டுள்ளது. கதைச் சுருக்கம் ஓரளவு பொருத்தமே. ஆனுல் புதிதாக இக்கூத்தினைப் பார்ப்பவர்களுக்கு முழு விளக்கத்தைத் தருமோ? என்பது சிறு சந்தேகம். வட்டக்களரி முறையை மாற்றி அரங்குகளில் ஆடப்படுதலும், ஒலி, ஒளி அமைப்புக்களை ஏற்படுத்தியதும் குறிப்பிடத்தக்க மாற

(7-ம் பக்கம் பார்க்க)

## றமழான் சிந்தனை

### அண்டை வீட்டாரின் அவசியம்

அண்டை வீட்டாரின் அவசியம். "இப்னு உமர் (ரலி) அவர்களின் வீட்டில் ஆடு அறுக்கப்பட்டது. அப்பொழுது அவர் தம் வீட்டினரிடம், 'நீங்கள் நம் அண்டை வீட்டினரான யூதனுக்கு அதிலிருந்து ஏதேனும் அன்பளிப்பாக அனுப்பி வைத்தீர்களா?' என்று கேட்டார்கள். அவர்கள் இல்லை என்றனர். அதுகேட்ட அவர்கள், 'அதிலிருந்து அவருக்குச் சிறிது அனுப்பிவையுங்கள்' என்று கூறி ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அடிக்கடி தம்மிடம் அண்டை வீட்டினர் பற்றிய கடமையைப் பற்றி எச்சரிக்கத் தவறியதில்லை என நபி (ஸல்) அவர்கள் கூறத் தாம் கேட்டதாக எடுத்துரைத்தனர்."

நபி (ஸல்) அவர்கள் கூறினுர்கள்:-

"எவருடைய அண்டை வீட்டினா அவருடைய தீங்கை விட்டு அமைதி பெறவில்லையோ அவர் சுவனபதி செல்லமாட்டார்."

மேலும் நபி (ஸல்) கூறினுர்கள்:-

'.எவரும் அண்டை வீட்டினர் அனுப்பும் அன்பளிப்பு ஆட்டின் கால் குழம்பக இருந்தபோதினும் (அதனை இழிவாகக் கருதி) அந்த அண்டை வீட்டினரை இகழ வேண்டாம்."

**நோன்பு தொழுகை நேர அட்டவணை**

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4-36 |
| சுபஹ் | 4-51 |
| சூரிய உதயம் | 6-11 |
| லுஹர் | 12-20 |
| அஸர் | 3-24 |
| மஃரிப் | 6-21 |
| இஷா | 7-41 |

# உங்கள் பிரச்சனை என்ன?

கேள்வி: நான் மக்கள் வங்கியில் அடைவு வைத்தவர் உடன் மீட்க முடியவில்லை. ஐந்துவருட கடன் அடிப்படையில் நகைகள் மீட்டுக் கொள்ளலாம் என்று கூறுகிறார்கள் அதன் பூரண விபரங்களைத் தரமுடியுமா?

—க. கமலாதேவி கோண்டாவில்

பதில்: மக்கள் வங்கி அடைவு நகை வைத்தவர்களுக்கு பல சலுகைகள் அறிவித்திருக்கிறார்கள். அதில் ஒன்று தான் ஐந்து வருடக்கடனில் நகைகளை மீட்பது. நீங்கள் இக்கடன் அடிப்படையில் நகைகளை மீட்கப்போகும் நாளில் அதற்குரிய முதலும் வட்டியும் கணக்குப் பார்க்கப்படும். அதில் 10 வீதத்தை உடனடியாகச் செலுத்த வேண்டும். மிகுதியாக உள்ள பணத்தை 60 மாதங்களால் பிரித்து உங்களை மாத மாதம் கட்டச் செல்வார்கள்.

இதில் முக்கிய விடயம், அடைவுவைத்த நகைகள் பூரணமாக காசு கட்டிய ஐந்து வருடங்களின் பின்புதான் வழங்கப்படும். (152)

# “உலக வரலாற்றையே மாற்றி புதிய வரலாறு படைத்துள்ளோம்” — யோகி

(ஒட்டுசுட்டான்)

உலக வரலாற்றை மாற்றியமைத்து, ஒரு புதிய வரலாற்றை நாங்கள் படைத்திருக்கிறோம்’’ என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் திரு. யோகி யோகரத்தினம் தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நடைபெற்ற போராளிகளின் நினைவுத்தூபித் திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

## படிப்பினை

திரு. யோகி அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:

‘‘இன்றைய உலகு விடுதலைப் புலிகளை வியப்போடு பார்க்கிறது. எமது போராட்டம் பலருக்குப் படிப்பினையாக அமைந்துள்ளது.

‘ எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் எப்பொழுதும எமது சுயநிர்ணய உரிமைக்காகவே போராடி வந்திருக்கிறோம். தமிழ்த் தேசிய இனமாகிய எங்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு.

## தொடர்ந்து போராடுவோம்

‘‘எமது தாயகப் பூமியான வடக்கு-கிழக்கு மாகாணத்தின் பூகோள ஒருமைப்பாட்டுக்காகத் தொடர்ந்து போராட வரையறுத்துள்ளோம்.

‘‘எமது வளர்ச்சி கண்டு பொறுக்காத இந்தியா, மற்றைய குழுக்களைக் கொண்டு எம்மை அளிக்க நினைத்தது. ஆனால் தோல்வி கண்டது.

‘‘ஆயுதங்களைக் களைவதற்காக 2 வருடங்கள் போராட்டம் நடத்திய இந்தியா இந்த மண்ணை ஆயுதமாக்கிவிட்டுச் சென்றது

‘‘எந்த ஒரு நாடும், எந்த ஒரு ஆதிக்கமும் எங்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுத்தர முடியாது. நாங்கள் தான் எங்கள் சுதந்திரத்தைப் பெறவேண்டும்.

‘‘நாங்கள் விரும்பாத எந்த ஒரு திர்வும் எங்கள் மீது வரலாற்றிலே இனி யாராலும் திணிக்கமுடியாத சூழலில் நாம் நிற்கிறோம்.

## ஆயுதக் கையளிப்பு

‘‘எமது வரலாற்றில் ஆயுதங்களைக் கையளிப்பதற்கோ கீழே வைப்பதோ என்ற பேச்சுக்கோ இடம் கிடையாது.

‘‘கண்ணீராலும், இரத்தத்தாலும், தியாகத்தாலும் வளர்க்கப்பட்ட இவ்விடுதலை இயக்கத்தில், ஆயுதம் ஓர் அங்கம்.

‘‘தமிழ்பேசும் மக்களைத் தமிழ்பேசும் மக்கள்தான் பாதுகாக்கமுடியும். வேறு யாராலும் பாதுகாக்கமுடியாது

‘‘எங்கள் ஆயுதங்கள் என்பது எமது பாதுகாப்போடு சம்பந்தப்பட்டது.

‘‘இந்த ஆயுதங்களை எந்தக் காலகட்டத்திலும் கையளிப்பதோ அல்லது கீழே வைப்பது என்ற பேச்சுக்கோ இடம் இல்லையென்பதைப் பல தடவைகள் தெரிவித்துள்ளோம்

## மாத்தயா பேச்சு

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ. மகேந்திரராசா (மாத்தயா) உரையாற்றுகையில் கூறியதாவது:

## வரலாற்றை உருவாக்குவோம்

‘‘போராளிகளின் நினைவுச்சின்னமானது எதிர்காலத்தில் ஒரு வரலாற்றை உருவாக்கும் தன்மை கொண்டது

‘‘இந்த நினைவுச் சின்னம், கடந்த காலத்தைச் சுட்டிநிற்கவில்லை. எதிர்காலத்தை எமது இனத்தின், சமுதாயத்தின் தேவையைச் சுட்டிநிற்கிறது.

‘‘எமக்குள் இருக்கக்கூடிய சாதிவேற்றுமைகள், ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் அகற்றப்படவேண்டும்.

‘நாம் ஒருபோராட்ட சக்தியாக மாறவேண்டும். எமது விடுதலைப்புலிகள் அமைப்பு ஒரு புதிய அரசியல் போராட்ட அணுகுமுறையை கொண்டுள்ளது. இதனை அனைவரும் புரிந்துகொண்டு எதிர்காலத்தில் எம்முடனே ஒருங்கிணைந்து ஒரு பெரும் சக்தியாக அணிதிரண்டு வெற்றியை நோக்கி நாம் செல்லவேண்டும் ’‘

ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. வேணு பேசுகையில்:

இந்தத் தூபியை அமைப்பதற்கு ஒட்டுசுட்டான் வட்டாரத்தை உள்ளடக்கி பொருளுதவி, நிதியுதவிகளைச் செய்து மாவீரர்களை நினைவுகூருவதற்காக ஒத்துழைப்புச்செய்த மக்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன் என்று கூறினார்.

கப்டன் தினேஷ், இளங்கோ, ராதா, தசன், சுமன் சின்ன ஜீவன், கார்த்திக், அசீஸ் ஆகிய 8 போராளிகளுக்கு ஒட்டுசுட்டானில் நினைவுத் தூபி திறந்துவைக்கப்பட்டது.

கவிஞர் காசி ஆனந்தன், வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் சந்திரன், மாயவன், மகளிர் முன்னணியைச் சேர்ந்த ஜொனி, கீத்தா சுந்தரி ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்கள். [து]

# உதைபந்தாட்ட பயிற்சி முகாமுக்கு யாழ். நகர வீரர்களுக்கும் முதன்முறையாக அழைப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டியைத் தெரிவு செய்யும் பயிற்சி முகாமுக்கு, சிறந்த வீரர்களை அனுப்பி வைக்குமாறு முதன் முறையாகக் கொழும்பிலிருந்து யாழ் உதைபந்தாட்ட லீக்குக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

‘‘கடந்த சில காலங்களாக இதுபோன்ற அழைப்புகள் எமக்குக் விடப்படுவதில்லை. அப்படியின்றி அழைப்பு விடப்பட்டிருந்தாலும் அவை பயிற்சி முகாம் ஆரம்பமாகிச் சில வாரங்கள் முடிந்தபின்பே எமக்குத் தபாலில் கிடைக்கும். ஆனால் இம்முறைதான் முறையான அழைப்பு முன் கூட்டியே எமக்கு விடப்பட்டுள்ளது’’ எனறு யாழ். உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் திரு. ஈ. கே. குமரையா தெரிவித்தார்.

ஜூலை மாத நடுப்பகுதியில் நடைபெறவிருக்கும், ஆசிய உதைபந்தாட்டப் போட்டியில் இலங்கையும் இம்முறை கலந்துகொள்ளவுள்ளது. இதற்கான பயிற்சி முகாம் அடுத்த மாதம் 11-ம் திகதி முதல் கொழும்பு ‘‘சுகததாஸா’’ விளையாட்டரங்கில் ஆரம்பமாகி நடைபெறவிருப்பதாகவும், இப்பயிற்சி முகாமுக்கு யாழ். நகரில் உள்ள முன்னணி விளையாட்டுக் கழகங்களிலிருந்து பல வீரர்கள் கலந்துகொள்ளவிருப்பதாகவும் திரு. குமரையா மேலும் தெரிவித்தார். (வி)

# 13 வயது உதைபந்தாட்ட ‘நொக்கவுட்’ போட்டி 6ம் திகதி முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

‘‘யாழ். உதைபந்தாட்ட லீக்’’ விளையாட்டுக்கழகங்களிடையே 13 வயதுக்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகும்.

மேற்படி போட்டியில் மொத்தம் ஆறு விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. இப்போட்டியின் விபரங்கள் பின்வருமாறு;

6-ம் திகதி முதல் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் மோதும். 2-வது போட்டியில் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகத்தை எதிர்த்து அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் விளையாட்டுக்கழகம் மோதும்.

7-ம் திகதி நடைபெறும் போட்டிகளில் முதல்நாள் போட்டிகளில் வெற்றிபெற்ற சழகங்களுடன் சென். அன்ரனிஸ் கழக ‘ஏ’ பிரிவுக் கோஷ்டியும், குருநகர் யுத் கார்மல் கழகமும் மோதும்.

8-ம் திகதி இப்போட்டிகளில் வெற்றிபெற்ற கழகங்களுக்கிடையில் இறுதியாட்டம் நடைபெறும். (வி)

## சிலப்பதிகாரம்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

றங்கள். உடையமைப்பு, மேடை ஒழுங்கிலும் சில மாற்றங்கள். மாறிவரும் இவ்வுலகிலே இம்மாற்றங்கள் வேண்டற்பாலதே.

இக்கூத்தினை ஆடியவர்கள், பட்டதாரி உயர் அரச அதிகாரிகள், ஆசிரியர்கள் அது மட்டுமல்ல, கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி போன்ற பாத்திரங்களைப் பெண் ஆசிரியைகளே ஏற்று நடத்தியமை பாராட்டத்தக்கது. பிற்பாட்டுப் பாடுதற்கு ஆண்களும், பெண்களும் அலங்காரத்தோடு நின்று பாடியதும் அலாதி. ஆட்டங்கள், பாட்டுக்களில் பழமை பேணப்பட்டுள்ளது. ஆனாலும் மாதவி, கண்ணகி ஆகியோரின் ஆட்டங்களில் பரதக்கலையின் சாயலையே மிகுதியாக காணமுடிந்தது. பொற்கொல்லனின் நடிப்பும், ஆட்டமும், பாட்டும் ஜோர். மாதவி, கண்ணகி, சோழன், கோவலன், பாண்டியன், அமைச்சர் பாத்திரங்களை ஏற்று நடித்தவர்களும பாராட்டத்தக்க முறையில் தமது பங்கை நிறைவேற்றியுள்ளார்கள். திரு. செல்லையா மெற்றுஸ்மெயில் அவர்கள் சிறந்த தயாரிப்பாளராகவும், பாண்டியனாகத் தனது பாத்திரத்தை சிறப்பாக நடித்துப் புகழ்பெற்றுவிட்டார். முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, கற்சிலைமடு ஆகிய இடங்களில் இக்கூத்து அரங்கேற்றப்பட்டுள்ளது.

# யாழ். ரயில் நிலையத்தில் ‘சூட்கேஸ்’ பறிகொடுத்த பெண்ணின் சோகக் கதை

(யாழ்ப்பாணம்)

‘‘நான் திருச்சியில் இருந்து வருகின்றேன். காடையர்கள் உள்ள கொழும்பில்கூட எனக்கொரு தொந்தரவுமில்லை. ஆனால் தபால் ரயிலில் வந்து யாழ்ப்பாணத்தில் இறங்கிய சொற்ப நேரத்தில் சூட்கேஸ் பறிகொடுக்க வேண்டிய அனுபவம் ஏற்பட்டுவிட்டது.’’

இவ்வாறு வெள்ளிக்கிழமை காலை, இரவு தபால் ரயிலில் வந்திறங்கிய முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டரின் மனைவியும் அரியாலையைச் சேர்ந்தவருமான திருமதி ரஞ்சிதமலர் செல்வராசா குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

புகையிரத நிலைய மேடையில் நிற்கும் போது ஒருவர் வந்து ‘டாக்ஸி, வேண்டுமா? என்று கேட்டார். அதுபற்றி அருகாமையில் நின்ற எனது சிநேகிதியிடம் கேட்டு விட்டுவந்தபோது ‘சூட்கேஸை’க காணவில்லை நான்

[8ம் பக்கம் பார்க்க)

ஹரன் திரையில்
2வது மாதம்!
6வது வெற்றி வாரம்!!
கமஹாசன் - சரண்யா
ஜெனகராஜ்
நடித்த
நாயகன்
(கலர்)

## புதிய தபாற்பெட்டி

(நெடுந்தீவு)

யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் புதிய தபாற்பெட்டி ஒன்றைத் தபாற் திணைக்களம் நிர்மாணித்துள்ளது.

பல வருடங்களாக இதன் முக்கியத்துவம்பற்றி பொதுத்தாபனங்களும், பொதுமக்களும் கேட்டிருந்தனர். (133)

## மோட்டார்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

## தமிழ் மொழியை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இளம் சந்ததியினர் அவரின் சேவைகள்பற்றி நன்கு அறிய வேண்டியது அவசியம். அவரின் தமிழ் நூல்கள் மக்கள் மத்தியில் கிடைக்கச் செய்ய வேண்டியது தமிழ் ஆர்வலர்களின் கடமையாகும்’’.

இறுதியில் கவிஞர் அழ. பகீரதன் தலைமையில் கவியரங்கமும் இடம்பெற்றது. (72)

# வண்ணை நாதனே!

அர்த்தநா ரீச்சுவரா! அன்றம் பலத்தினிலே
நர்த்தம் புரிந்தவண்ணை நாதனே!—கர்த்தனுங்
கூத்தனே! நாம்பட்ட பாடுகளோ கொஞ்சமல்ல
ஏத்துகிறோம் வந்தருள்வாய் இங்கு.

★

அமைதிகாப் பதற்காய் வந்தோர்
அடித்த‘ஷெல்’ தாக்க இங்கு
அமைந்தநின் கோயிற் கூரை
அழிந்ததே தூபி யோடு;
சுமைமிகுங்கோ புரமுங் கூடச்
சுந்தரம் இழந்து போச்சே
உமைபதீ! இனியென் றாலும்
உவந்தருள் புரிகு வாயே!

—கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

(இன்று வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் 11-ம் திருவிழா)

## தடுத்துவைக்கப்பட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த புதன்கிழமை இரவு 2-30 மணியளவில் வடகிழக்கு மாகாண கடல் எல்லைப்பிராந்தியத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்த 315 மீனவர்களையும் 59 (ரூலர்) இழுவைப்படகுகளையும் இன்பருட்டி மீனவர்கள் தமிழ் ஈழவிடுதலைப் புலிகளுக்குக் கொடுத்த முறைப்பாடுகளையொட்டி கைது செய்யப்பட்டார்கள்

கைது செய்யப்பட்ட மீனவர்கள் இன்பருட்டி மீனவர்கள் அனுசரணையுடன் நன்கு உபசரித்துக் கவனிக்கப்பட்டனர்.

இந்த மீனவர்கள் அனைவரும் தமது அத்துமீறல்கள் தவறு என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து, புலிகள் மனிதாபிமான அடிப்படையில் நேற்று எவ்வித நிபந்தனைகளுமின்றி பாதுகாப்பாக வடகிழக்கு பிராந்திய எல்லைவரை கடற்பொறுப்பாளார் திரு. அன்பப்பா தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் உதவியுடன் அவர்களை அனுப்பிவைத்தனர்.

அச்சமயம் ஸ்ரீலங்கா கடற்படையினரும் இந்தியக் கடற்படையினரும் இலங்கை இந்திய எல்லைகளில் நடமாடியது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதே வேளையில் இலங்கை கடற் பிராந்தியத்துக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாக சந்தேகிக்கப்பட்டு விடுதலைப் புலி இயக்கத்தினரால் கைது செய்யப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் பிரச்சனை திருப்திகரமாக தீர்க்கப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு சமாதான சபையின் தலைவர் ஜனாப் எ. ஸி. எஸ். ஹமித் அறிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் விவகாரம் தொடர்பாக தமிழகமுதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இலங்கை ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசாவுடன் தொலைபேசி மூலம் நேரடியாகத் தொடர்புகொண்டது குறிப்பிடத்தக்கது. (51)

## இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இனிமேல் இப்படியான அத்துமீறல்களில் நாம் ஈடுபடமாட்டோம். மேலும் இந்தத் தவறை ஏனைய மீனவர்களும் செய்யாதவாறு தமிழக அரசிடம் நாம் முறைப்பாடுசெய்யவுள்ளோம்.

இந்திய மீனவர் தலைவரான நாகப்பட்டினம் புலியூர் வடக்கைச் சேர்ந்த திரு. சொக்கன் செல்லத்துரை 'ஈழநாடு' நிருபரிடம் இவ்வாறுதெரிவித்தார்.

நாம் இங்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டு நன்கு உபசரிக்கப்பட்டோம். மனிதாபிமானமுறையில் எம்மை மன்னித்து விடுதலை செய்ததற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு பிரபாகரனுக்கும், இயக்கத்தின் ஏனைய அங்கத்தவர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். (51)

## நன்றி நவிலல்

### அமரர் து. கனகசுந்தரராஜா

27-3-90 அன்று அகால மரணமடைந்த அமரர் து. கனகசுந்தரராஜா அவர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், அவர் வைத்தியசாலையில் இருந்த போது அவரைப் பராமரித்த யாழ். போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்களுககும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

(சி-3673) அன்னாரின் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முருகேசு வைரமுத்து



அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாய் தெற்கில் வசித்தவருமான மு. வைரமுத்து J. P (முன்னைநாள் சி. சி. எஸ்) காலமாகிவிட்டார். இவர் திருமதி பூ. மகாலட்சுமியின் அன்புக்கணவரும், திருவாளர்கள் சிவகுமார், வரதகுமார், நிருந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார் அன்னாரின பூதவுடல் இன்று (31-03-90) சனிக்கிழமை மாலை 3-00 மணியளவில் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்வார்களாக.

தகவல்;

'குமரபுரம்' மனைவி, மக்கள்.
லோட்டன் வீதி,
மானிப்பாய். (ஏ-649)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81

## சுவீடிஸ் ஸ்தானிகர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

'யாழ்ப்பாணமுறைசாரா'க் கல்வி பிரிவினரின் நடவடிக்கைகள் திருப்திகரமாகவுள்ளது. நீங்கள் முன் வைதுள்ளதிட்டங்களைப் பரிசீலனை செய்து அறிவிக்கிறோம்.

இவ்வாறு யாழ்ப்பாண கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப்பிரிவுக்கு விஜயம் ய்செத சுவிடிஷ் ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

அவரோடு அகதிகளுக்கான ஐ. நா. ஸ்தானிகராலயத்தை சேர்ந்த யாழ். பிராந்திய பொறுப்பாளர்கள் அசதுல்லா, ராதா ஆகிய இருவரும் சமூகமளித்திருந்தனர்

முறைசாராக் கல்விப்பிரிவினர் தங்கள் திட்டங்களை, மகஜர் ஒன்றின் மூலம் சுவிடிஷ் ஸ்தானிகருக்கும் தெரியப்படுத்தியுள்ளனர். (152)

## புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்மேலும் தெரிவிக்கையில், இராணுவ பலத்தில் உலகில் நாலாவது இடத்தை வகிக்கும் வல்லரசு இந்தியா. இது சர்வதேச உலகிற்கும் நன்கு புரியும். புலிகளின் அடிப்படைப் பலம் ஆயுத பலமும், தளராத மனவீர உணர்ச்சியுமேதான். ஆயுதமும் புலிகளின் வீரமும் இரண்டறக் கலந்துவிட்டதாலேயே இதுவரைகாலமும் தமிழ் மக்களின் தன்மானத்தையும் தமிழ் மக்களையும் காத்துவர முடிந்தது. அப்பேர்ப்பட்ட ஆயுதங்களை நாம் எவர்களிடமும் எச்சந்தர்ப்பத்திலும் ஒப்படைக்க மாட்டோம். இது இறுதியான முடிவு என்றார். [51]

## யாழ். போதனா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை சுகாதார அமைச்சின் திடீர் உத்தரவின்பேரில் நிறுத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் தற்போது நிலவும் சிற்றூழியர் பற்றுக்குறையை நீக்குமுகமாக இடம்பெறவிருந்த நேர்முகப்பரீட்சைகடந்த இரண்டு மாதங்களில் இரண்டாவது தடவையாக நிறுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மறு அறிவித்தல்வரை இப் பரீட்சைக்காக அனுப்பப்பட்ட கடிதங்கள் செல்லுபடியற்றதாகுமென நிர்வாக உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

## யாழ். ரயில்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

புகையிரத நிலைய அதிபரிடம் முறையிட்டேன்.

இச்சம்பவம் நடந்த அரை மணி நேரத்துக்குள், வழிப்பாக இருந்த புகையிரத நிலைய ஊழியர்கள் சந்தேகத்தின் பேரில் வீரன் ராசகோபால் என்பவரை பிடித்து புகையிரத நிலைய அதிபரிடம் ஒப்படைத்தனர். புகையிரத நிலைய அதிபர் சந்தேக நபரை மடக்கிப்பிடித்த ஊழியர்களை வெகுவாகப் பாராட்டினர் [152]

## நாளை முதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை மோட்டார் சைக்கிளில் வருபவர்களுக்கென வேகக் கட்டுப்பாடு அமுலுக்கு வருகிறது. என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

மககள்நெருக்கம்மிகுந்தஇடங்களில் 40 கி. மீ. வேகமும், ஏனைய இடங்களில் 60 கி மீ. வேகமும் என்ற ரீதியில் வேகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

இதனை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (144)

## வல்லை முகாமிலிருந்து ராணுவம் வெளியேறியது

(வடமராட்சி)

வல்லையிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று நண்பகல்ளவில் முற்றுகவெளியேறிவிட்டனர்

இவர்கள் செல்லும்போ[illegible] வல்லை பக்கலை நோக்[illegible] கையசைத்தவாறு பலாலி [illegible] வழியாக வாகனங்களு[illegible] சென்றனர்.

## புதிய அமைச்சரவை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா - பௌத்த சாசனம், கொள்கை திட்டமிடல் அமுலாக்கல். பாதுகாப்பு- முன்னரும் இந்த அமைச்சுக்கள் இவரிடமே இருந்தது.

திரு. டி. பி. விஜயதுங்க-பிரதமர், நிதி. முன்பும் இதே அமைச்சு.

திரு. விஜயபால மெண்டிஸ்- போக்குவரத்து நெடுஞ்சாலைகள்-முன்னரும் இதே அமைச்சு.

ஜனாப் எ. சி. எஸ் ஹமீத்- நீதி. முன்னர் உயர்கல்வி, விஞ்ஞான தொழில் நுட்பம்;

திரு. எம். வின்சன்ட் பெரேரா-சுற்றுடல், பாராளுமன்ற அலுவலகள், முன்னர் நீதி, பாராளுமன்ற அலுவல்கள்.

திரு லலித் அத்துலத் முதலி-கல்வி. முன்னர் விவசாய, உணவு கூட்டுறவுத்துறை.

திரு. பெஸ்ரஸ் பெரேரா- பொதுநிர்வாக, மாகாணசபைகள், உள்நாட்டு அலுவல்கள். முன்னர் மின்சக்தி, எரிபொருள்.

திரு. எஸ். தொண்டமான் - சுற்றுலா, கிராமியத்துறை. முன்னர் கிராமியத்துறை, புடவைத்தொழில்.

திரு. ரணில் விக்கிரமசிங்க - கைத்தொழில்துறை, விஞ்ஞான தொழில் நுட்பம், முன்னர் கைத்தொழில்துறை.

திரு. பி. தயாரத்ன- காணி, நீர்ப்பாசன, மகாவலி[illegible] முன்னர் இதே அமைச்சு.

திரு. ஜோசப் மைக்கல் பெரேரா- கடற்றொழில், நீர[illegible] வளமூலம். முன்னர் இதே அமைச்சு.

திரு. டபிள்யு.ஜே.எம். லொக்கு பண்டார- பண்பாட்டு அலுவலகள், தகவல். முன்னர் கல்வி, கலாசார, தகவல்.

திரு. அலிக் அலுவிகார- அஞ்சல், தொலைத்தொடர்பு. முன்னர் இதே அமைச்சு.

திரு. நந்தா மத்தியூ- இளைஞர் விவகார, விளையாட்டுத் துறை. முன்னர் இதே அமைச்சு.

ஜனாப் ஏ. ஆர். மன்சூர்- வியாபாரத்துறை, வர்த்தகம். முன்னர் வர்த்தகம், கப்பற்துறை.

திரு. யு. பீ. விஜயக்கோன் -கைத்தறி, புடவைக கைத்தொழில். முன்னர் பொதுநிர்வாக, மாகாணசபைகள், உள்நாட்டு அமைச்சு.

திருமதி ரேணுகா ஹேரத் - சுகாதார, மகளிர் விவகாரம். முன்னர் இதே அமைச்சு.

திரு. ஏ. எம். எஸ். அதிகாரி - மீள் அமைப்பு புனர்வாழ்வு. முன்னர் சுற்றுலாதுறை.

திரு. சிறிசேன கூரே - வீடமைப்பு நிர்மாணத்துறை. முன்னர் இதே அமைச்சு.

திரு. ரஞ்சன் விஜயரத்ன - பெருந்தோட்டதொழில் துறை. முன்னர் வெளிவிவகாரம்.

திரு.கே.டி.எம் சி பண்டார- மின்சக்தி எரிபொருள் துறை (புதிய அமைச்சர்)

திரு. ஹரோல் ஹேரத் - வெளிநாட்டு அலுவல்கள் (புதிய அமைச்சர்)

திரு. வீரசிங்க மல்லிமாராச்சி - உணவு கூட்டுறவுத் துறை (புதிய அமைச்சர்)

திரு. ரூபசேன கருணதிலக - துறைமுகங்கள் கப்பல் துறை. (புதிய அமைச்சர்)

திரு. ஆர். என். தர்மதாஸ பண்டா - கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சி (புதிய அமைச்சர்)

திரு. வி. என் பிரேமசந்திரா - தொழில், வாழ்க்கைத் தொழில். பயிற்சி. (புதிய அமைச்சர்)

(மேற்படி ஆறு புதிய அமைச்சர்களும் முன்னுள் இராஜாங்க அமைச்சர்களாவர்.)

## இராஜாங்க அமைச்சர்கள்

திரு. ரஞ்சன் விஜயரட்ண - பாதுகாப்பு

திரு. ஹரோல் ஹேரத் - நிதி

திரு. ஜோன் ஏ. ஈ. அமரதுங்க - வெளிநாட்டு அலுவல்கள்

திரு. விமல் விக்கிரமசிங்க - கொள்கை திட்டமிடல் அமுலாக்கம்

திரு எச், ஜே. பி. நெல்சன் - கிராமிய தொழில்துறை

ஜனாப். எம். ஏ. எச். மக்றூப் - துறைமுக, கப்பல்துறை

ஜனாப். ஜாபிர் ஏ. காதர் - சுகாதாரம்

திரு. எச். எம் ஏ. லொக்குபண்டார - கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சி

திரு. ரோஹான் அபயகுணசேகர - வியாபாரம், வர்த்தகம்

திரு. மேவின் ஜே. குரே - மின்சக்தி எரிபொருள்

திரு பி. எஸ். எஸ். கலபதி - கடற்றொழில், நீரியல் வளமூலங்கள்

திரு. காமினி லொக்குகே - சுற்றுலாத்துறை

திரு. கே. ஆனந்த குலரட்ண - நெடுஞ்சாலைகள்

திரு. எல். பி ஜே. செனிவிரட்ண - தொழில் வாழ்க்கை தொழில் பயிற்சி

திருமதி எம்- சமந்தா கருணரட்ண -மீளமைப்பு, புனர்வாழ்வு சமூகநலன்

திரு லால் தர்மசிறி ஏ. கமகே - பௌத்த சாசனம்

ஜனாப். அப்துல் பாக்கீர் மார்க்கார் - வீடமைப்பு

திரு. ரவீந்திர சமரவீர - உணவு கூட்டுறவு

தி[illegible]. ரி. எம் ஆரியதாஸ - விளையாட்டுத்துறை

திரு. பி. பி. தேவராஜ் - இந்துசமய, கலாசார அலுவல்கள்

திரு. ஏ. ஜே. ரணசிங்க - தகவல்

திரு. எம். எஸ். செல்லச்சாமி - கைத்தொழில்

ஜனாப் யூ. எல். எம். பாரூக் - போக்குவரத்து

திரு சரத் வெலகெதர - நீர்ப்பாசனம்

திருமதி ஏ. சந்திரா கருணரட்ண - மகளிர் விவகாரம்

திருமதி ஆர். எம். புலேந்திரன் - கல்வி

திரு. சிஸ்ர ஹெட்டியாராச்சி - பாராளுமன்ற அலுவல்கள்

ஜனாப் ஏ. எச். எம். அஸ்வர் - முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள்

திரு.எம்.வி. ஏ. குணதிலன்ன - புடவை கைத்தொழில்

[சி-து]